பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 22 புதன்கிழமை 06.01.2021 கதிர் 62

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழர் தரப்பைப் பொறுத்த வரை இன்றும் நாளையும் முக்கிய நாள்களாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

ஏற்கனவே, சுமந்திரன் – கஜேந்திரகுமார் – விக்னேஸ்வரன் ஆகியோர் இன்று கொழும்பில் கூடிப் பேசுவர் என்று செய்தி பக்கம்02 »

# ஜெய்சங்கருடன் நாளை சம்பந்தன் முக்கிய பேச்சு

## கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்பு



இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நாளை காலை 9.30 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. பக்கம் 02 »

## பல்கலை மாணவர்களின் உணவு ஒறுப்பு முடிவுக்கு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.பல்கலைக்கழக சம்பிரதாயபூர்வ வாயிலில் நேற்றுமுன்தினம் முதல் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மாணவர்களுக்கு பால் வழங்கி உணவு ஒறுப்பை முடித்து வைத்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் 08 ஆம் திகதி கலைப்பீட மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் பக்கம் 02 »

## வடக்கில் நேற்று 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் 13 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதன்படி வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பக்கம் 02 »

## தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்!

### வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள்



(நமது நிருபர்கள்)

சிறைச்சாலைகளில் நீண்ட நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சிவில் அமைப்புக்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர் பக்கம் 02 »

## அங்வெல்ல பகுதியில் கடத்தப்பட்ட தேரர் எரிக்கப்பட்டு சடலமாக மீட்பு!



அங்வெல்ல – கொடிகந்த தியான மண்டபத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட தேரர் எரிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமையையடுத்து அந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உட்பட நான்கு சந்தேக நபர்கள் பக்கம் 02 »




## மேலும் இருவர் பலி; சாவு 217 ஆக உயர்வு

கொழும்பு, ஜன. 06

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கைக்கு அமைய கொரோனாத் தொற்றுக்குள்ளான இருவர் இறுதியாக உயிரிழந்துள்ளனர்.

மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த 68 வயதான பெண் ஒருவரும், களுத்துறைப் பகுதியைச் சேர்ந்த 75 வயதான மற்றுமொரு பெண்ணுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 217 ஆக அதிகரித்துள்ளது.

## கொரோனாத் தொற்றுக்கு நேற்றும் 479 பேர் இலக்கு!

கொழும்பு, ஜன. 06

இலங்கையில் நேற்றும் 479 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 41 ஆயிரத்து 977 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்து 726 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 38 ஆயிரத்து 262 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 247 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியாகியிருந்தது என்பது தெரிந்தது தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆகியோர் வரப்போகும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வைத் தமிழர் தரப்பு எப்படிக் கையாள்வது என்பது குறித்து பொதுநிலைப்பாடு ஒன்றை எட்டும் முயற்சியாக நாடாளுமன்றத்தில் கூடிப் பேசுவர் என்றதான் செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால், அந்தக் கூட்டம் இப்போது விரிவு பெற்றிருக்கின்றது. முக்கிய தமிழ்க் கட்சிகள் எல்லாம் அதில் பங்குபற்றும் சூழல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து இந்தச் சந்திப்புக்கான இணைப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இன்று மாலை 4.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம் பெறுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, பதில் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, புளொட் சார்பில் த.சித்தார்த்தன் எம்.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி. எல்லோரும் இக்கூட்டத்தில் பங்கு பற்றுகின்றனர்.

முக்கியமான தமிழ்க் கட்சித் தலைவர்கள் எல்லோரும் நீண்ட காலத்துக்குப் பின்னர் தமிழரின் பொதுவிடயம் ஒன்று பற்றிய பொது அணுகுமுறை குறித்துப் பேசுவதற்காக ஒரு மேசையில் சந்திப்பது முக்கிய திருப்புமுனைதான்.

யாழ்ப்பாணத்தில் நிற்கும் சுரேஷ் பிறேமச்சந்திரன், சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா போன்றோரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்களேயானால் கூட்டத்துக்கு மேலும் வலுச் சேரும்.

இன்றைய கூட்டத்தை முடித்துக் கொண்டுதான் நாளை காலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை கூட்டமைப்புத் தலைவர்கள் சந்திக்கின்றார்கள். இன்று தமிழ்த் தலைவர்கள் ஒன்றுகூடி எடுக்கக் கூடிய தீர்மானம் நாளைய சந்திப்பிலும் காத்திரமாக செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கலாம்.

அடிக்கடி சுகயீனத்துக்கு உள்ளாகும் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் சில சமயங்களில் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றாமல் இருக்கலாம். எனினும் நாளை இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்கும் கூட்டமைப்புக் குழுவுக்கு அவரே தலைமை தாங்குவார்.

இதே சமயம், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் பல குழப்பங்களுக்கும் தீர்வு காணும் முகமாக கட்சியின் மத்திய குழுவைக் கூட்டும்படி பல தரப்புகளில் இருந்தும் கட்சித் தலைமைக்கு அழுத்தம் சென்றிருப்பதாக அறியவருகின்றது. இது தொடர்பில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நான்கு கடிதங்களை கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டது. ஒன்றுக்கும் பதில் இல்லை.

கடைசியாக குறைந்த பட்சம் கட்சியின் அரசியல் குழுவையாவது காலதாமதமாகாமல் கூட்ட வேண்டும் என்று பதில் பொதுச் செயலாளர் வலியுறுத்தியிருக்கின்றார் என்று தெரிகின்றது.

*"பார்ப்போம். அதைக் கூட்டுவதற்கும் திகதி சம்பந்தனிடம்தானே எடுக்க வேண்டும்."* – என்று கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பதில் பொதுச் செயலாளருக்கு பதிலிறுத்திருக்கின்றார்.

இப்போது எல்லோரும் கொழும்பில் நிற்கின்றனர். குறைந்த பட்சம் அரசியல் குழுவையாவது கூட்டுவதற்குத் திகதி ஒதுக்கப்படக் கூடும் எனத் தெரிகின்றது.

எனினும் கூட்டத்தை எங்கு நடத்துவது என்பதுதான் கேள்வி. அரசியல் குழுவில் அங்கம் வகிக்கும் இருபது பேரில் பலர் வடக்கைச் சேர்ந்தவர்கள். கொவிட் தொற்றுச் சூழலில் கொழும்பு சென்று திரும்புவது அவர்களில் பலருக்கு நெருக்கடியானது. அதனால் கூட்டத்தை வவுனியாவில் வைத்தால் நல்லது என்பது அவர்களின் அபிப்பிராயம். ஆனால் உடல் நலிவுற்றிருக்கும் தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் கொழும்பிலிருந்து வவுனியாவுக்குப் பயணம் செய்து திரும்புவது இப்போதைய நிலையில் சாத்தியமற்றது என்று தெரிகின்றது.

தமிழரசின் அரசியல் குழுவைக் கூட்டுவதற்குத் திகதி நிர்ணயிக்கப்படுமா? அந்தக் கூட்டம் எங்கு நடக்கும்? இன்றோ, நாளையோ முடிவு தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

## பல்கலை மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கு பல்கலைக் கழகப் பேரவையால் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் காலை முதல் தண்டனை வழங்கப்பட்ட மாணவர்கள் தம்மைத் தண்டனைகளில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உணவு ஒறுப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

மாணவர்களின் போராட்டத்தை அடுத்து, நேற்றுமுன்தினம் மாலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மனிதாபிமான அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை உடனடியாக விலக்கிக் கொள்வதாக அறிவித்ததோடு, நேற்றுமுன்தினம் பின்னிரவில் மாணவர்கள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று தனது நிலைப்பாட்டை விளங்கப்படுத்தியிருந்தார்.

எனினும், தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளில் இருந்து தாம் நிபந்தனையற்ற முறையில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மாணவர்கள் தமது உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

மாணவர்கள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருந்த இடத்துக்கு நேற்று மாலை சென்ற துணைவேந்தர் உணவு ஒறுப்பைக் கைவிடுமாறு மாணவர்களிடம் விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் உள்நுழைவுத் தடையை நீக்கும் அதிகாரம் தனக்குண்டு என்பதையும், மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் வந்து தமது வழமையான செயற்பாடுகளின் மூலம், அந்தந்தத் துறைத் தலைவர்கள் மற்றும் பீடத்தின் விரிவுரையாளர்களின் நல்லெண்ணத்தை வெல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும், வைத்தியர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாணவர்கள் தொடர்ந்தும் உணவு ஒறுப்பில் ஈடுபடுவது ஆரோக்கியமானதல்ல என்பதைச் சுட்டிக்காட்டியமையுடன், மாணவர்கள் உணவு ஒறுப்பைக் கைவிட்டு, தன்னால் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைத் திறவுகோலாகப் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, போராட்டத்தைக் கைவிடுவதற்கு மாணவர்களும் முன்வந்தனர். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர் ஆலோசகர், மாணவர் நலச் சேவை உதவிப் பதிவாளர், மாணவ ஒழுக்காற்று அதிகாரி மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் துணைவேந்தர் மாணவர்களுக்குப் பால் வழங்கி உணவு ஒறுப்பை நிறைவுக்குக் கொண்டு வந்தார்.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கள் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

**யாழ்ப்பாணத்தில்**

அந்த வகையில், யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆதீனத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் வடக்கு – கிழக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் கலந்துகொண்டார்கள்.

**வவுனியாவில்**

இதேவேளை, வவுனியாவிலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா காமினி மகா வித்தியாலத்துக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டவர்கள், இலங்கை அரசே தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய், எமது உறவுகளை சிறைகளில் மடியவிடவேண்டாம், தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் இல்லை, கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கு போன்ற வசனங்கள் அடங்கிய பாதாதைகளை ஏந்தியிருந்தியும், கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**கிளிநொச்சியில்**

அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கோஷங்கள் எழுப்பியதுடன் பொங்கல் பரிசாக அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

**மன்னாரில்**

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி மன்னாரிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுமத் தலைவர் ஜே.ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் சமூக அமைப்பினர் ஆகியோர் பங்கேற்றனர்.

பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர் ஊடகங்கள் முன்பாக வாசிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

**முல்லைத்தீவு**

அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் அமைப்பினர் ஆகியோரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவிலும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

**கிழக்கில்**

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

'இலங்கை அரசே அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க' என்னும் தொனிப்பொருளில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார வழிமுறையைப் பின்பற்றியவாறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்து குருமார்கள், வணபிதாக்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர். சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் பொது மக்கள் உட்படப் பலர் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டனர்.

## ஜெய்சங்கருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய பிரேரணை, ஜெனிவா விவகாரத்தில் தற்போதைய அரசின் அசமந்தப்போக்கு மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரை ஜெய்சங்கர் இன்று சந்திக்கவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இவர் சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனையில் ஐவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து ஒருவர் வந்து இவர்களின் வீட்டில் தங்கிச் சென்றிருந்தார் எனவும், அவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகிய நிலையில் குறித்த குடும்பத்தாருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வளாகத்தில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த கேகாலை மாணவன் ஒருவரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்.கொக்குவிலிலும் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். கொழும்பு சென்று வந்த குறித்த நபர் தனிமைப்படுத்தலில் இருந்த போதே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## அங்வெல்ல பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப்பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அங்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்மோதர, கொஸ்வத்த, கொடிகந்த தியான மண்டபத்திலிருந்து கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட 65 வயதுடைய உடுவில தம்மசிறி தேரரின் சடலம், கொட்டெனியாவ பகுதியில் அமைந்துள்ள பொது மயானமென்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

தியான மண்டபத்திலிருந்த தேரரை இனந்தெரியாத நபர்கள் சிலர் வான் ஒன்றில் கடத்திச் சென்றுள்ளனர் என அங்வெல்ல பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கொட்டெனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பொது மயானமென்றில் இனந்தெரியாத சடலமொன்று காணப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதே தியான மண்டபத்தைச் சேர்ந்த மற்றுமொரு தேரர் ஒருவர், அந்தச் சடலம் தமது தியான மண்டபத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட தேரருடையது என்று அடையாளம் கண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சடலம் தொடர்பான நீதிவான் பரிசோதனைகளை மினுவங்கொட நீதிவான் நீதிமன்றம் முன்னெடுத்தது. பின்னர் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தனிப்பட்ட குரோதம் காரணமாகவே சந்தேக நபர்கள் தேரரை இவ்வாறு கடத்திச்சென்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

# போதைப் பொருள்கள் பொதுவெளியில் அழிப்பு!

## சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஜன.06

எதிர்காலத்தில், நாட்டில் கைப்பற்றப்பட்ட பாரிய அளவிலான போதைப் பொருள்களின் மாதிரிகளை தக்கவைத்து பின்னர் கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப் பொருள்களையும் அழிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, 2015 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட 717 கிலோகிராம் போதைப் பொருள்களுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 2740 கிலோ போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இலங்கையில் போதைப் பொருள் கடத்தல் குறையவில்லை என சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர, நாட்டில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் நீதிமன்றங்களில் வழக்கு முடிவடையும் வரை பல ஆண்டுகளாக ஆதாரமாக வைக்கப்படுவதால் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான கவலைகளைப் போக்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகளுக்கு மாதிரிகளை வைத்திருந்த பின்னர் கைப்பற்றப்பட்ட அனைத்து போதைப் பொருள்களையும் அழிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என கூறினார்.

இந்த விவகாரம் சட்டமா அதிபருடன் கலந்துரையாடப்படும் என்றும் மாதிரிகள் நேரடியாக அரச ஆய்வாளருக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர், அதே நேரத்தில் போதைப் பொருள்கள் அனைத்தும் வெளிப்படையாக அழிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சகல விமான நிலையங்களும் ஜனவரி 23 திறக்க ஏற்பாடு!

ஜனவரி 23 ஆம் திகதி தொடக்கம் விமான நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட அனைத்து வணிக விமானங்களுக்காக விமான நிலையங்கள் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சுற்றுலாத்துறை இயல்பு நிலைக்கு திரும்பும் என்றும், கொரோனா தொற்று பரவாமல் தடுக்க சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# சித்திரைக்கு முன்னர் முதலாவது தடுப்பூசி!

எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் கொவிட் 19 வைரஸுக்கான முதலாவது தடுப்பூசியை இந்நாட்டவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே அவர் இந்த விடயம் தொடர்பான தகவலை வெளியிட்டார்.

மேலும் அதற்கான கலந்துரையாடல் தற்போது இறுதி மட்டத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அப்புத்தளை நகருக்கான புதிய மேயர் பிரதமர் முன்னிலையில் பதவியேற்றார்!



அப்புத்தளை நகரின் புதிய மேயர் உபுல் திசாநாயக்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் பிரதமரின் விஜேராம வீதியிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) பதவியேற்றார்.

முன்னாள் மேயர் சம்பத் லமாஹேவாவின் பதவி விலகலை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் உபுல் திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

1997ஆம் ஆண்டு நகர சபை உறுப்பினராகத் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த உபுல் திசாநாயக்க, இதற்கு முன்னரும் அப்புத்தளை மேயராக பதவி வகித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டிஆராச்சி, பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட பிரதேச அரசியல்வாதிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

# கொவக்ஸ் தடுப்பூசியை பெற அமைச்சரவை அங்கீகாரம்!

கொவக்ஸ் கொரோனா தடுப்பூசியைப் பெறுவதற்காக உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி முன்வைத்த இந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையும் இந்தக் கொவக்ஸ் செயன்முறையில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், கொவக்ஸ் வசதிகள் மூலம் கொவிட் – 19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான தகைமையை எமது நாடு கொண்டுள்ளதாக உலக சுகாதார தாபனம் உள்ளடங்கலாக, ஜி.ஏ.வி.ஐ. நிறுவனம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தடுப்பூசி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு படிமுறைகளின் கீழ் விண்ணப்பங்களைக் கோருமாறு நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமையுடன், இலக்குக் குழு மற்றும் தடுப்பூசியைக் களஞ்சியப்படுத்தும் இயலளவு தொடர்பாகத் தொழிநுட்பத் தகவல்கள் உள்ளடங்கிய தடுப்பூசி விண்ணப்பத்தின் முதலாம் மற்றும் ஏ பகுதி 2020 டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு (நாளை) முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்த துடன், இலங்கை இந்த விண்ணப்பத்தை உரிய நேரத்தில் சமர்ப்பித்துள்ளது.

அதன் இரண்டாம் பகுதியான தடுப்பூசி பெறல் மற்றும் அதற்கமைவான முற்காப்பீட்டு ஒப்பந்தத்தை எட்டுவதற்காக 2021 ஜனவரி மாதம் 08 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கமைய, சட்டமா அதிபர் வழங்கியுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி கொவக்ஸ் இற்கான தடுப்பூசி விண்ணப்பத்தின் 'பி' பகுதியைச் சமர்ப்பிப்பதற்கும், கொவக்ஸ் வசதிகள் மூலம் தடுப்பூசி வகைபிரித்து வழங்கும் பட்சத்தில் குறித்த தயாரிப்பாளருடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும், சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவது மட்டுமே இராணுவம்

சாரதி அனுமதிப் பத்திரத்தை இராணுவத்தினர் அச்சிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தற்காலிகமானது என்றும் இது அரச நிதியை சேமிப்பதற்கான நடவடிக்கை என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அரச நிறுவனங்களை இராணுவம் கையகப்படுத்தவில்லை எனக் கூறினார்.

மேலும் மோட்டார் போக்குவரத்துத் துறையின் மற்ற நடவடிக்கையில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை என்றும் இராணுவம் அச்சிடும் பணியில் மட்டுமே ஈடுபடுவதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எனவே அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட ஒரு நிரந்தரமான முயற்சி இது அல்ல என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

# 423 இலங்கையர் நாடு வந்தடைவு!

கொழும்பு, ஜன.06

கொரோனா பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 423 இலங்கையர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இவர்கள் ஒன்பது விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் 245 பேர் தொழில்வாய்ப்புக்காக கட்டார் நாட்டுக்குச் சென்று கொரோனா பரவலால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் திட்டத்தின் கீழ் டோகாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள், விமான நிலையத்தின் மருத்துவ ஆய்வகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, இலவச பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமையுடன், அரச தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏனைய இலங்கையர்கள் வேறு பல நாடுகளிலிருந்து நாட்டுக்கு இந்தக் காலக் கட்டத்தில் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த அனைவரும் விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர் கொழும்பில் உள்ள பல தனியார் வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்களால் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.


மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=





லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஜெய்சங்கரின் வருகை

இலங்கை அரசியலில் ஈடுபாடுள்ள அனைவரினதும் கவனமும் இப்போது கொழும்புப் பக்கம் குவிந்திருக்கின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று மாலை கொழும்பு வந்து சேர்ந்துள்ளார். அவர் நாளை வரை கொழும்பில் தங்கியிருக்கின்றார்.

இங்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள் உட்படப் பலரையும் அவர் சந்தித்துப் பேசுகின்றார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் இணக்கப்பாட்டுக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று ராஜபக்ஷ அரசின் பலமிக்க தரப்புகள் வலியுறுத்தி வரும் வேளையில் இந்திய வெளிவிகார அமைச்சரின் இந்த விஜயம் இடம்பெறுகின்றது.

இந்தியத் தலையீட்டினால், இங்கு சிறுபான்மையினராக இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்டதே இந்த மாகாண சபை முறைமையாகும்.

அதை ஒழிப்பது பற்றிய கோரிக்கை இப்போது தீவிரமடைந்துள்ள பின்புலத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன.

ஒன்று – அந்த முறைமையின் கீழ் மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் சட்ட ரீதியாகப் பகிரப்பட்டுள்ளன. அரசமைப்பில் உள்ள அந்த ஏற்பாடுகள் 32 ஆண்டுகள் கடந்தும் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை. நடைமுறைப்படுத்தப்படா விட்டாலும் சட்டத்தில் எழுத்திலும் கூட அத்தகைய அதிகாரப் பகிர்வு இருக்கவே கூடாது என்ற மனத்திடத்தில் உள்ள ராஜபக்ஷக்கள் இப்போது ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கின்றார்கள்.

அடுத்தது – அத்தகைய அரசமைப்பு ஏற்பாட்டை அது வந்த பின்னர், அதனை நினைத்தபடி மாற்றி அமைக்கக் கூடிய வலுவுடன் – நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பலத்துடன் – ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றார்கள்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத் தீயை – இனவெறியை – மூட்டி, அதில் தேர்தல் அரசியல் வெற்றியை ஈட்டி வரும் ராஜபக்ஷக்களுக்கு, அந்த வெற்றியைத் தரும் தனது வாக்கு வங்கிக்குக்கு – பௌத்த, சிங்களப் பேரினவாதிகளுக்கு – திருப்தியளிக்கும் விதத்தில் தாம் செய்த சாதனையாகக் காட்டுவதற்கு, ஓரளவேனும் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்த மாகாண சபை முறைமையை அடியோடு ஒழிப்பது உதவும் என்பது கண்கூடு.

இந்த மாகாண சபை முறைமையை, இந்தத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்களாகிய தங்களுக்குப் பெற்றுத் தந்ததில் பங்களித்து, அதற்குப் பிணை நின்ற புதுடில்லி, இந்த முறைமை ஒழிக்கப்படுவதன் மூலம், தாங்கள் நட்டாற்றில் கைவிடப்படுவதற்கு அனுமதிக்காது என்று இலங்கைத் தமிழர்கள் நம்புகின்றனர்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் விமர்சகர்களோ இது விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு சுவரில் எழுத்தாக திட்டவட்டமாகவும், தெளிவாகவும் இருக்கும் போது, அது புரியாமல் – பெருத்த எதிர்பார்ப்பில் – தமிழ்த் தலைமைகள் உள்ளன என்று வெளிப்படையாக ஏளனம் தெரிவிக்கின்றனர்.

ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் அரசினால் கொண்டு வரப்பட்டது மாகாண சபை முறைமை. அது எக்கேடு கெட்டுப் போனாலும் நமக்கென்ன என்ற நிலைமைதான் தற்போதைய பாரதீய ஜனதாவின் புதுடில்லி அரசுக்கு என்கின்றனர் அவர்கள்.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு 99 ஆண்டு கால குத்தகைக்கு இலங்கை அரசு வழங்கியுள்ள பின்புலத்தில், புதுடில்லியின் இன்றைய சிரத்தை கொழும்பு துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு முனையத்தைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதேயன்றி, மாகாண சபை முறைமை நீக்கப்படாமல் பாதுகாத்துக் கொள்வதல்ல. தேவைப்பட்டால் இதில் முன்னையதைப் பொறுவதற்காக, பின்னையதை விட்டுக் கொடுக்கும் வர்த்தகத்துக்கும் (Trading) கூட புதுடில்லி போகக் கூடும் என்கின்றர் அவர்கள்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குத் தாரை வார்க்க முன்னைய நல்லாட்சி அரசு தயாராக இருந்தபோதும், அப்போதைய அரசியல் நெருக்கடிகள், சிக்கல்களால் அது நிறைவேறவில்லை.

ராஜபக்ஷக்களின் புதிய அரசு ஆரம்பத்தில் அதற்கு இணங்கவில்லை. ஆனால் இப்போது அதற்குத் தயார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். இந்திய வெளிவிகார அமைச்சர் கொழும்பு வரும் செய்தியை நேற்று முன்தினம் தாங்கி வந்த அரசு சார்பு ஏடான 'டெய்லி நியூஸ்' தினசரியின் அதே இதழில், கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் இந்தியப் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யப்படும் என கப்பல், துறைமுகங்கள் அமைச்சர் றோஹித அபேகுணவர்த்தன வெளியிட்ட தகவல் தலைப்புச் செய்தியாக வந்தமை அதனை உறுதிப்படுத்துகின்றது.

கொழும்புத் துறைமுக விவகாரம் இந்திய வெளியுறவு அமைச்சரின் தற்போதைய விஜயத்தில் முக்கிய இடம் பெறுவதால்தான் அவரைச் சந்திக்கப்போகும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா, தம்முடன், கொழும்புத்துறைமுக விவகாரத்தை எதிரணியில் பிரதானமாகக் கையாளும் ஹர்ஷா டி சில்வாவையும் தம்முடன் அழைத்துக் செல்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

கொழும்புத் துறைமுகத்துக்காக மாகாண சபை முறைமையை விற்காவிட்டால் சரி.

# உலகளவில் இறப்பு விகிதம் மிகக் குறைவு இலங்கையின் நடவடிக்கைக்குப் பாராட்டுக்கள்

## தெரிவித்தது உலக சுகாதார ஸ்தாபனம்

கொழும்பு, ஜன.06

உலகளவில் ஒப்பிடும் போது நாட்டில் கொரோனா இறப்பு விகிதம் (0.5 வீதம்) மிகக் குறைவாக இருப்பதாகவும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை சிறப்பாகச் செயற்படுவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்திலிருந்து கொரோனா தொற்று அதிகரித்துள்ள போதிலும் தற்போது அடையாளம் காணப்படும் நோயாளிகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் கொரோனா தொற்றால் 200 இற்கும் மேற்பட்ட இறப்புகளுடன் இலங்கையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வலுவான பொது சுகாதார நடவடிக்கைகளும் பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்துதல் நடவடிக்கைகளும் இதற்குக் காரணம் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் 215 இறப்புகளுடன் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்குக் கொரோனாத் தொற்றும் இலங்கையில் பதிவாகியுள்ளன.

ஏறக்குறைய ஒரு வருடம் முன்பு கொரோனாத் தொற்று நாட்டில் பரவத் தொடங்கியதிலிருந்து 38 ஆயிரம் இலங்கையர்கள் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று அத்துரலிய ரத்ன தேரர் பதவியேற்பு



எங்கள் மக்கள் சக்தி கட்சியில் இருந்து தேசிய பட்டியலில் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட அத்துரலிய ரத்தன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனமொன்று கிடைத்திருந்த நிலையில், அந்த ஆசனத்துக்கான உறுப்பினரைத் தெரிவுசெய்வதில் தொடர்ந்து இழுபறி நிலை நீடித்தது.

அதன் பின்னர் எங்கள் மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அத்துரலிய ரத்தன தேரர் பெயரிடப்பட்டுள்ளார் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாவிதன்வெளி பிரதேச செயலக

# பட்டதாரி பயிலுநர்களின் இரு நூல்கள் வெளியீடு!



நாவிதன்வெளி பிரதேச செயலக பட்டதாரி பயிலுநர்களின் இரு நூல்கள் உத்தியோக பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு பயிற்சி காலத்தில் வழங்கப்பட்ட பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட 'தாபன விதிக்கோவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட வினா விடைகள்', 'உலகையே திரும்பிப் பார்க்க வைத்த உன்னத மனிதர்கள்' ஆகிய இரு நூல்கள் கடந்த (திங்கட்கிழமை) உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டன. நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனின் வழிகாட்டலில் பட்டதாரி பயனர்களால் இந்த நூல்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் நாவிதன் வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், உதவிப் பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், நிர்வாக உத்தியோகத்தர் கே.யோகேஸ்வரன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கே.பி.மனோஜ் இந்திரஜித், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சிவம் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

# பிரதமரின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்ட நிலையில் திறப்பு!



நவீனமயப்படுத்தப்பட்ட பிரதமரின் பொது மக்கள் தொடர்பாடல் பிரிவு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொள்ளுபிட்டி, ஆர்.ஏ.டி மெல் மாவத்தையில் திறந்து வைக்கப் பட்டது.

மஹாசங்கத்தினரின் பிரித் பாராயணத்தை தொடர்ந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர், மங்கள விளக்கேற்றி பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிகளை சுபநேரத்தில் ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு – 03, கொள்ளுபிட்டி ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, இல.101 என்ற இடத்தில் அமைந்துள்ள இந்தப் பிரிவு பொதுமக்களின் வசதிக்காக நவீனமயப்படுத்தப்பட்டு இதற்கு முன்னர் காணப்பட்ட அதே இடத்தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான வார நாள்களில் பொது மக்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும்.

பொதுமக்களின் கருத்துக்கள், பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்திறனான சேவையினூடாகத் திறம்பட தீர்த்து வைப்பதே பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் நோக்கமாகும்.

கடந்த காலத்தில் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அவ்வாறான யோசனைகள், முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை உள்ளடக்கிய சுமார் 12 ஆயிரம் கடிதங்களுக்கு பிரிவின் தலையீட்டுடன் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, மேலதிக செயலாளர்களான சமிந்த குலரத்ன, ஹர்ஷா விஜேவர்தன, பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிற்கு பொறுப்பான மேலதிக செயலாளர் நிசாந்த வீரசிங்க, அரச அதிகாரிகள், பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக வறிய நாட்டுப் பயணிகளைக் கூட்டி வருவதா?

## நகைப்புக்குரியது என்கிறார் சம்பிக்க ரணவக்க



இலங்கையை விட வறிய நாடான உக்ரேனிலிருந்து சுற்றுலாப்பயணிகளை அழைத்து வந்து எமது நாட்டின் சுற்றுலாப் பயணத்துறையை மேம்படுத்த முயற்சிப்பதாகக் கூறுகின்றமை நகைப்பிற்குரிய விடயமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உலகின் பல்வேறு நாடுகள் தமது மக்களுக்கு கொவிட் - 19 தடுப்புமருந்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றி செயற்பட்டு வருகின்றன. இஸ்ரேல் அந்நாட்டு சனத்தொகையில் 10 சதவீதமானோருக்கு தடுப்புமருந்தை வழங்கிவிட்டது.

அதேபோன்று இந்தியாவும் இரண்டு தடுப்புமருந்துகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டிருப்பதுடன் அவற்றை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனினும் எமது நாட்டில் மென்மேலும் கொரோனா வைரஸை பரவச் செய்வதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏனெனில் கொவிட் - 19 தடுப்புமருந்தைப் பெற்றுக்கொள்வதற்கான முறையான நடவடிக்கைகள் எவையும் இதுவரையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக அதனூடாகத் தமது தனிப்பட்ட நலன்களை எவ்வாறு நிறைவேற்றிக்கொள்வது என்பது குறித்தே அரசாங்கம் கவனம்செலுத்திவருகின்றது.

அண்மைக்காலத்தில் வெளிநாடுகளில் சிக்கியிருக்கும் இலங்கையர்களின் வேதனைக்குரலே எமக்கு அதிகம் கேட்கின்றது. அவர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கான விமானப்பயணச்சீட்டு, தங்குவதற்கான விடுதிகளின் கட்டணம் உள்ளிட்ட அனைத்தும் உயர்த்தப்பட்டுள்ளன. அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கத்தால் முறையான செயற்திட்டங்கள் எவையும் வகுக்கப்படவில்லை.

ஆனால் ராஜபக்ஷ குடும்பத்திற்கு மிகவும் நெருங்கியவரான உதயங்க வீரதுங்க உக்ரேனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வந்திருக்கிறார். உக்ரேனின் தலா வருமானம் இலங்கையின் தலா வருமானத்தை விடவும் குறைவாகும். உக்ரேன் என்பது இலங்கையை விடவும் வறியநாடு என்பதுடன், கடந்த காலங்களில் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வந்திருக்கிறது.

அத்தகைய நாடொன்றிலிருந்து சுற்றுலாப்பயணிகளை வரவழைத்து, எமது நாட்டின் சுற்றுலாப்பயணத்துறையை மேம்படுத்த முயற்சிப்பதென்பது மிகவும் நகைப்பிற்குரிய விடயமாகும்.

அதுமாத்திரமன்றி, அவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் சிலர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றமை தற்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. உக்ரேனுடன் தொடர்புடைய வகையில் இடம்பெற்ற மிக் விமானக் கொள்வனவு மோசடிக்குப் பதில் கூற வேண்டியவர்களின் ஒருவரே உதயங்க வீரதுங்க ஆவார்.

அவ்வாறிருக்கையில் அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயற்பாடுகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும். - என்றார்.

# முகக்கவசம் அணியாமல் கைதானோர் மீது அன்டிஜன் பரிசோதனை நடத்த ஏற்பாடுகள்

கொழும்பு, ஜன. 06

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட் – 19 சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக திங்கள் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் 74 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை 2 ஆயிரத்து 172 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



இதேவேளை முகக் கவசம் அணியாத குற்றச்சாட்டுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்கள் மீது விரைவான அன்டிஜன் சோதனை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

# கொழும்பில் அதிக துணைக் கொத்து பெருக்கம் அதுவே தொடர்ந்தும் முடக்கத்துக்குக் காரணம்!

கொழும்பு, ஜன.06

முடக்கப்பட்டுள்ள கொழும்பின் பல இடங்களில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை சுகாதார அதிகாரிகள் நிறைவு செய்யவில்லை என்றும் அந்தப் பகுதிகளில் அதிக கொரோனா துணைக் கொத்து பெருக்கம் காணப்படுவதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதன் காரணமாகவே குறித்த பகுதிகள் நீண்ட காலத்துக்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன எனப் பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்தோடு அந்த பகுதிகளிலிருந்து கொரோனா தொற்று நோயாளிகள் தொடர்ந்தும் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில், குறிப்பாக கொழும்பில் வசிக்கும் மக்கள் சுகாதார நடைமுறைகளையும் ஒழுங்கு முறைகளையும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கொரோனாவின் இரண்டாவது அலையால் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட பெண்கள்!

## தலதா அத்துகோரல கவலை

கொவிட் தொற்றின் இரண்டாம் அலையில் ஆடை தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்களும், நாட்டுக்குப் பாரிய அளவில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பணிப்பெண்களும் தற்போது பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:-

நாம் மகளிர் தொடர்பான யோசனைகளை முன்வைத்த போது அதற்கு எதிராக கூச்சலிடப்பட்டது.

ஆனால் இன்று பெண்களின் பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் பேசுவதற்குக் கூட ஓர் அமைச்சர் நியமிக்கப்படவில்லை. ஆடை தொழிற்சாலை மூலம் நாட்டுக்கு கூடுதல் வருமானத்தை பெற்றுக் கொடுப்பது பெண்களாவர்.

கொவிட் தொற்று பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஏற்படுத்திக் கொடுக்கும் பெண்களை அழைத்து வருவதற்கு கூட அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.



ஆடை தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் இரண்டாம் அலையின் பின்னர் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பெருந்தோட்டப் பகுதிகளிலும் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஆனால் அவை வெளிப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் பெண்களின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் எமது ஜனாதிபதி வேட்பாளர் கருத்துத் தெரிவித்த போது அதனைப் பற்றி பேச ஆண்களுக்கு உரிமையில்லை என்று கூறினார்கள்.

40 ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் 30 ஆயிரம் பேர் குணமடைந்துவிட்டனர் என்று பெருமை பேசிக் கொள்கிறார்கள். ஆனால் 40 ஆயிரம் பேருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்று யாரும் கூறுவதில்லை.

பெண்களுக்கான அமைச்சொன்றைக் கூட வழங்க முடியாத அரசாங்கத்தின் ஆட்சியில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் குரல் கொடுக்கும். - என்றார்.

# புதிய ஆண்டில் அலுவலக கடமைகளை ஆரம்பித்தது வடக்கு ஆளுநர் செயலகம்!

புதிய ஆண்டில் அலுவலக கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டு, தேநீர் விருந்துபசாரம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் 5 மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஐந்து மாவட்டத்தின் பாதுகாப்பு படைத்



தளபதிகள், வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், வடக்கு மாகாண அவைத் தலைவர், யாழ். மாநகர முதல்வர் என பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் அதிகம் அபாயமிக்க பகுதிகள்!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிக அபாயமிக்க பகுதிகளின் தகவல்கள் அடங்கிய புதிய வரைபடத்தை சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வெளியிட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேநேரம், சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் தனிமைப்படுத்தல் மையங்களிலும் பதிவானநோயாளர்களின்எண்ணிக்கை அடங்கிய பட்டியலும் தொற்று நோய் விஞ்ஞான பிரிவால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த 14 நாள்களில் பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த தகவல்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

# அரசியல் கைதிகள் விடுதலை வேண்டி தமிழர் தாயகம் எங்கும் போராட்டம்

## யாழ். நல்லூரில்...







தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்திலும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களின் ஏற்பாட்டில், நல்லூர் நல்லை ஆதினத்தின் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'இலங்கை அரசே! தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்', 'தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கு!', 'தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் இல்லை', 'எமது உறவுகளை சிறையில் சாக விடாதே!' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



## மட்டக்களப்பில்...










தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பில் கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார வழிமுறையினை பின்பற்றியவாறு இந்த போராட்டம் நேற்று காலை காந்தி பூங்கா முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண பொது மக்கள், சிவில் அமைப்புகள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள் என்பன இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இலங்கை அரசே அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்க என்னும் தொனிப்பொருளில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் 'இலங்கை அரசே! தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து நல்லிணக்கத்தை உறுதிப்படுத்து', 'தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குங்கள்' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டமையுடன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

மேலும் இதன்போது, இந்த நாட்டில் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்கள மக்களுக்கு ஒரு சட்டமா, இந்த நாட்டின் சட்டங்கள் ஓர் இனத்திற்கு மட்டுமா, அரசியல் கைதிகளின் விடுதலையில் பாரபட்சம் காட்டுவது ஏன் போன்ற பல்வேறு கேள்விகள் அரசாங்கத்திடம் எழுப்பப்பட்டன.

இந்த போராட்டத்தில் சிவில் அமைப்புக் களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அரசியல் கைதிகள் விடுதலை வேண்டி தமிழர் தாயகம் எங்கும் போராட்டம்

## வவுனியாவில்...







அரசியல் கைதிகளை விடுதலை செய்ய கோரி நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா காமினி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நீண்டகாலமாக சிறைகளில் வாடிக்கொண்டிருக்கும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்.

தற்போது கொவிட்19 தாக்கத்துக்கு மத்தியில் அவர்கள் மிகுந்த பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

எனவே அவர்களது பிள்ளைகள், குடும்பத்தினரின் நலனையும் அவர்களது நலனையும் கருத்தில் கொண்டு ஜனாதிபதி அவர்களை விடுவிக்க வேண்டும். – என்று தெரிவித்தனர்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'எமது உறவுகளை சிறைகளில் மடியவிட வேண்டாம்', 'தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் அல்லர்', 'கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கு' போன்ற பாதாகைகளை ஏந்தியிருந்தமையுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

## முல்லைத்தீவில்...



அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி முல்லைத்தீவு மாவட்டத்திலும் நேற்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச சபை உறுப்பினர்கள், காணாமல்போனோரின் உறவினர்கள், கிறிஸ்தவ முல்லைத்தீவு பங்குத் தந்தை உள்ளிட்ட சுமார் 70 பேர் வரையில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதிக்குரிய மகஜர் வாசிக்கப்பட்டதுடன், குறித்த மகஜரை ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் அமைச் சர் உள்ளிட்டோருக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## கிளிநொச்சியில்....







**அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டமொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.**

**கிளிநொச்சி ஏ9 வீதியில் அமைந்துள்ள மாவட்ட செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் நேற்று காலை 10 மணியளவில் ஆரம்பமானது.**

**அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிவில் அமைப்புக்கள், வடக்கு மாகாண மக்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**இதன்போது அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கோஷங்கள் எழுப்பப்பட்டமையுடன், பொங்கல் பரிசாக அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும் எனவும் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.**

**இந்தப் போராட்டத்தில் சிவில் அமைப்புக்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**

**இதன்போது தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு அரசியல் கைதிகளின் குடும்பங்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தமையுடன், ஜனாதிபதிக்கான மகஜரும் வாசிக்கப்பட்டது.**

## மன்னாரில்....








கொரோனா பெருந்தொற்றின் அபாயத்திலிருந்து தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாப்பதன் நிமித்தம் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரி மன்னாரிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் நகர் மற்றும் முருங்கன் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இந்த கண்டன போராட்டங்கள் இடம்பெற்றன.

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுமத் தலைவர் ஜே.ஜாட்சன் பிகிராடோ தலைமையில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் பொது மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவும் முருங்கன் பஸ் தரிப்பிட பகுதியிலும் ஒரேநேரத்தில் இந்தக் கண்டன போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசே தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய், தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கு, தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் அல்லர், எமது உறவுகளை சிறையில் மடியவிட வேண்டாம் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர் ஊடகங்கள் முன்பாக வாசிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# எந்தக் கட்சிக்கும் அநீதி இழைக்கவில்லை அடித்துக் கூறுகின்றார் பேராசிரியர் பீரிஸ்!

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் உள்ளக விவகாரத்தை சுதந்திர கட்சியின் தலைவர் சர்வதேசமட்டத்துக்குக் கொண்டு சென்றமை பொருத்தமற்ற செயற்பாடாகும். பொதுஜன பெரமுனவுடன் கூட்டணியமைத்துள்ள எந்தக் கட்சிக்கும் இதுவரையில் அநீதி இழைக்கப்படவில்லை.

அனைத்து தரப்பினரது கட்சித் தனித்துவமும் பாதுகாக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில்இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொதுத்தேர்தலில் பெற்றுக் கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை மக்களுக்காகப் பயன்படுத்துவோம்.

பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டுமக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பலமாக ஸ்தாபித்துள்ளார்கள். பொதுஜன பெரமுனவுடன் பிற கட்சிகள் ஒன்றினைந்தமையால் இந்த வெற்றியைப் பெற முடிந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கில் உள்ளக அரசியல் தொடர்பில் கருத்துரைத்தவர் அல்லர். ஏன் எதிர்க்கட்சியை கூட விமர்சித்தமை கிடையாது. உள்ளக அரசியலில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றமை இயல்பானதொரு விடயம்.

ஆனால் இதனை சர்வதே அரங்கிற்கு கொண்டு செல்லும் போது நாடு மலினப்படுத்தப்படும். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எந்தக் காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் உள்ளக விவகாரம் மற்றும் கருத்து முரண்பாடுகளை சுதந்திர கட்சியின் தலைவர் இந்திய ஊடகத்திடம் குறிப்பிட்டுள்ளமை இன்று அரசியல் களத்தில் பிரதான பேசு பொருளாக உள்ளது.

உள்ளக பிரச்சினையை சர்வதேச ஊடகங்களிடம் குறிப்பிட்டால் மாத்திரம் தீர்வை பெற்றுக் கொள்ள முடியாது. கூட்டணியில் இருந்துக் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளமை தவறாகும். இதனால் சர்வதேச மட்டத்தில் நாடு மலினப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணியமைத்துள்ள எந்தக் கட்சிக்கும் இதுவரையில் அநீதி இழைக்கப்படவில்லை. அனைத்து கட்சிகளின் தனித்துவமும் மதிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் யாரை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதை பொதுஜன பெரமுன தீர்மானிக்கவில்லை. நாட்டு மக்களே அதனைத் தீர்மானித்தார்கள்.

ஆகவே கூட்டணிக்குள் எழுந்துள்ள கருத்து முரண்பாட்டுக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காணமுடியும. பொதுஜன பெரமுன



கூட்டணியாகவே தொடர்ந்து பயணிக்கும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக தற்போது மாறுப்பட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கஷடந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் வாக்கு கேட்க அஞ்சி தேர்தல் முறைமையில் திட்டமிட்டு சிக்கல் நிலையை ஏற்படுத்தியது.

தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்ற பிரச்சினை காணப்படுகிறது. அதற்கு நாடாளுமன்றம் ஊடாகவே தீர்வைப் பெறமுடியும். - என்றார்.

## 45 ஆயிரத்தைக் கடந்தது கொரோனாத் தொற்றாளர்!

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை தற்போது 45 ஆயிரத்தையும் கடந்துள்ளது.

திங்கள் மாத்திரம் மொத்தமாக 468 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புதிதாக அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் 451 பேர் பேலியகொட - மினுவாங்கொடை கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் ஆவர்.

ஏனைய 16 பேரும் சிறைச்சாலை கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள். அதேநேரத்தில் பாகிஸ்தானிலிருந்து வருகை தந்த ஒருவரும் அடையாளம் காணப்பட்டார்.

இதனால் இலங்கையில் பதிவான மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது திங்கட்கிழமை வரை 45 ஆயிரத்து 242 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை பேலியகொட - மினுவாங்கொடை கொரோனா கொத்தணிப் பரவலில் சிக்கிய மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 41 ஆயிரத்து 498 ஆக பதிவாகியுள்ளது.

இது இவ்வாறிருக்க் கொரோனா தொற்றுக்குள்ளான 565 நோயாளர்கள் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர். அதன் காரணமாகக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் 37 ஆயிரத்து 817 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த சாரதிகள் திஸ்ஸமகாராம பகுதியிலிருந்து அழைத்துவரப்பட்டமையுடன், சுற்றுலாப்பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக உரிய சுகாதாரப்பாதுகாப்பு நடைமுறைகளுடன் தயார்நிலையில் இருந்த சாரதிகளைப் போன்று இவர்கள் தயாராக இருக்கவில்லை.

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டின் சுற்றுலாத்துறையும் அதனைச் சார்ந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோரும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், தற்போது இந்த சுற்றுலாப் பயணத்தின் விளைவாக எவ்வித முன்னேற்றகரமான மாற்றங்களும் ஏற்பட்டுவிடவில்லை.

உக்ரைனுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க இந்த சுற்றுலாப்பயண ஏற்பாட்டில் முக்கிய பங்காற்றியிருக்கிறார்.

எனினும் இந்த சுற்றுலாப்பயணத்தை ஏற்பாடு செய்வதில் எந்த கம்பனிகள் தொடர்புபட்டிருக்கின்றன? அவற்றின் உரிமையாளர்கள் யாவர்? அவர்கள் எந்த அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்? இதற்கான அரசாங்கத்தால் எந்தளவு நிதி செலவிடப்பட்டுள்ளது? - என்பன போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆகவே இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கம் நன்கு கவனம் செலுத்த வேண்டும். அதே போன்று இந்த சுற்றுலாப்பயணத்தின் விளைவாக புதியதொரு கொரோனா வைரஸ் கொத்தணி ஏற்படுமாயின், அது ஏற்கனவே நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரத்துக்கு மேலும் பாதிப்பையே ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

## சமூகங்கள் எதிர்கொண்ட பாதிப்பு கிழக்கில் திரட்டப்படுகிறது விவரம்!

கிழக்கு மாகாணத்தில் கடந்த 40 வருட காலத்தில் சமூகங்கள் எதிர்கொண்ட பாதிப்புக்களைப் பற்றிய விவரம் திரட்டப்படுவதாக அந்த மாகாண சமூக அநீதிகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பிரிவினைவாத நடவடிக்கை அல்லது முறையற்ற செயற்பாடுகள் அல்லது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளால் பாதிப்பிற்குள்ளான தனிநபர்கள் அல்லது குழுக்களின் கவனத்தை ஈர்க்கும் பொது அறிவித்தலாக இது விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதிப்பிற்குள்ளான தரப்பினர் தங்களது விவரங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் திருகோணமலை கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலுள்ள சமூக அநீதிகளை ஆராய்வதற்கான நிபுணர்கள் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வாழ்விடம் நிலபுலன்களின் அழிவு, வாழ்வாதார இழப்பு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான உரித்து, சொத்துக்களின் அல்லது வேறு ஏதேனும் இழப்பு நிவாரணத்தைப் பெற பாதிக்கப்பட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்ற விவரங்கள் ஆவணங்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## பெண் ஒருவரின் சங்கிலி வவுனியாவில் அபகரிப்பு

வவுனியாவில் பெண்ணின் தங்கசங்கிலியை அறுத்து சென்ற சம்பவம் ஒன்று சாந்தசோலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா சாந்தசோலையில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தும் பெண்இரவு கடையில் தனிமையில் இருந்துள்ளார்.

இதன் போது மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இரு நபர்கள் அவரது வியாபார நிலையத்தில் பொருள்களை கொள்வனவு செய்கின்றமைபோல பாசாங்கு செய்துவிட்டு அவர் அணிந்திருந்த இரண்டு பவுண் தங்க சங்கிலியை அறுத்து சென்றுள்ளனர்.

சம்பவத்தில் நிலை குலைந்த பெண் அயலவர்களுக்குத் தெரிவித்தமையுடன் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த முதலாம் திகதியும் வவுனியா நகர்பகுதியில் தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்ற இருவரை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

## எமது பரிந்துரைகளை அரசாங்கம் தாமதித்தேனும் ஏற்றமை மகிழ்ச்சி!

### சஜித் புகழாரம்



ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் வரவு - செலவு திட்ட விவாதம் என்பவற்றின் போது பெண்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பல்வேறு பரிந்துரைகளை நாம் முன்வைத்தோம். அவற்றில் சிலவற்றை அரசாங்கம் தாமதமாகவேனும் புரிந்துகொண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்த தேசிய தேர்தல்களின் போதும் வரவு - செலவு திட்ட விவாதத்தின் போதும் மகளிர் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பல பரிந்துரைகளை நாம் முன்வைத்தோம்.

இதற்கு எதிர்தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்கள். 2 கோடியே 20 லட்சம் மக்கள் வாழ்கின்ற எமது நாட்டில் 58 சதவீதமானோர் பெண்களாவர். 42 - 57 லட்சத்திற்கு இடைப்பட்டோர் மாதாந்த சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இதன் போது பாவிக்கும் பொருள்களால் பாரதூரமான சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது மாதாந்த பிரச்சினையால் மூன்றில் ஒரு பங்கினர் பாடசாலைகளுக்குச் செல்கின்றமையைத் தவிர்க்கின்றனர். ஒவ்வொரு வருடமும் 13 லட்சம் மாணவிகள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றனர்.

தாமாதமாகவேனும் அன்று நாம் முன்வைத்த பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் புரிந்து கொண்டமைக்கு நாம் நன்றி கூறுகின்றோம். முன்னர் நாம் கூறிய பல விடயங்கள் இன்று உண்மையாகியுள்ளன. எனவே எமது பரிந்துரைகளை துரிதமாக செயற்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். இவ்வாறான விடயங்கள் தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருத்துக்களை முன்வைப்பதிலிருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை. நாட்டிலுள்ள அனைத்து பெண்களுக்கும் சுகாதார பாதுகாப்பு துவாய்களை வழங்கும் வரை இது தொடர்பான ஜனநாயக ரீதியான போராட்டத்தை நாம் கைவிடப்போவதில்லை. - என்றார்.

# போலிக் குற்றச்சாட்டுக்களால் அரசைக் கவிழ்க்க முடியாது!

## இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த



நாட்டு மக்களுக்காக முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளை அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் விமர்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவம் வெட்கப்பட வேண்டும்.

போலியான குற்றச்சாட்டுக்களினால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது என பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பகல்வி பாடசாலை அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி சேவை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த போது 7.3 சதவீதமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி கடந்த 5 வருடங்களில் 2.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி எவ்வித கருத்தும் குறிப்பிடவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் கிராமிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உள்நாட்டில் மேற்கொள்ளக் கூடிய உற்பத்திகளை உள்நாட்டில் ஊக்குவித்து முன்னெடுக்கும் செயற்பாடுகளை மக்கள் விடுதலை முன்னணி விமர்சித்து ஊடக அறிக்கைகளை வெளியிடுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவம் வெட்கப்பட வேண்டும்.

குறைந்த வருமானம் பெறும் 2 லட்சம் குடும்பங்களைத் தெரிவு செய்து அந்தக் குடும்பங்களிலுள்ள பெண்கள் சுயதொழில் செய்வதற்குத் தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதுடன் கிராமிய சந்தைகளில் 25 ஆயிரம் புதிய தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை விரைவில் முன்னெடுக்கப்படும்.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த அரசாங்கத்தையும் அதற்கு ஆதரவாக செயற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியையும் நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் புறக்கணித்துள்ளார்கள். ஆகவே அரசாங்கத்தை பலவீனப்படுத்த முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது. – என்றார்.

# 7 ஏக்கர் நெற்பயிர்கள் யானைகளால் சேதம்!



வவுனியா ஆசிகுளம் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட இலுப்பைக்குளம் பகுதியில் ஒரே இரவில் 7 ஏக்கர் நெற் பயிரை யானைகள் முற்றாகத் துவம்சம் செய்துள்ளன. குறித்த பகுதியில் உள்ள இலுப்பைக் குளத்திற்கு கீழ் 80 ஏக்கர் அளவில் நெற்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த திங்கள் இரவு குறித்த வயல் பகுதிகளிற்குள் உள்நுழைந்த 50 இற்கும் மேற்பட்ட யானைக்கூட்டங்கள் குடலைப்பருவத்தில் காணப்பட்ட 7 ஏக்கர் நெல்வயலை முற்றாக அழித்து நாசப்படுத்தியுள்ளன.

வங்கியில் கடன் பெற்று செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர் செய்கையை ஒரே இரவில் வந்து யானைகள் அழித்துச்சென்றமையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுவரையான காலப்பகுதியில் ஒன்று, இரண்டு யானைகளே வந்துசென்றிருந்த நிலையில் திங்கள் வழமைக்கு மாறாக 50 இற்கும் மேற்பட்ட யானைகள் வயல்வெளிக்கு வந்து பயிரை முற்றாகச் சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளன.

தகவல் தெரிந்த நாம் உடனடியாக ஓடிச்சென்று வெடிகொளுத்தி அவற்றை கலைக்கமுற்பட்டபோதும், அவை எம்மை தாக்குவதற்காக கலைத்தமையால் பயிர்களைக் காப்பாற்ற முடியாதநிலை ஏற்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறனர். இதேவேளை ஏனைய பயிர்களையும் யானைகள் அழிப்பதற்கு முதல் எமக்கான யானை வேலிகளை அமைத்து தருமாறும் அழிவடைந்த பயிர்களிற்கான நஷ்ட ஈடுகளையும் வழங்குமாறும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# மக்கள் கொரோனாவுடன் வாழ இந்த ஆண்டும் பழக வேண்டும்!

## வைத்தியர் அசேல குணவர்தன தெரிவிப்பு



இந்த ஆண்டும் பொது மக்கள் கொரோனாத் தொற்றுடன் வாழ்வதற்கு பழகிக் கொள்ள வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.


மேலும் மக்கள் நிபந்தனைகளுக்கு ஏற்பவும் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொலன்னறுவையில் உள்ள புதிய சிறுநீரக வைத்தியசாலைக்கு ஆய்வு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக அரசாங்கம் ஒரு நாளைக்கு 60 மில்லியனுக்கும் அதிகமாக செலவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த சோதனைகளுக்குத் தேவையான நிதியைப் பெற, நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் முடக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் நடமாட்டங்கள் அதிகரிப்பு!



வவுனியா – பட்டாணிச்சூர் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்தப் பகுதி முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

முதலாம் ஒழுங்கையில் இருந்து 5 ஆம் ஒழுங்கை வரை அனைத்து பகுதிகளும் முடக்கப்பட்டுள்ளமையுடன் எவரும் வெளியேற அனுமதிக்கப்படாத நிலையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வவுனியா நகர்ப்பகுதியிலுள்ள பல வர்த்தக நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குறித்த பகுதியிலேயே வசித்து வருகின்றனர்.

இந்தச் சூழலில் இந்தப் பகுதியில் இருந்து வருகை தந்து, வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை வர்த்தக நிலையங்களை மூடுமாறு சுகாதார பகுதியினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் அந்த அறிவுறுத்தல் செவிமடுக்கப்படாத நிலையில் வவுனியா நகர்ப் பகுதியில் அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன.

காலையில் இருந்து பட்டாணிச்சூர் பகுதி முடக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் வசிப்பவர்களின் வர்த்தக நிலையங்கள் எவ்வாறு திறக்கப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கு அப்பால் வவுனியா நகர்ப்பகுதியில் அதிகளவானோர் நடமாடிவருகின்றமையால் வவுனியாவின் நிலை என்னவாகும் என்பதே மக்களின் அச்சமாகவுள்ளது.

# அனைத்து மார்க்க சேவைகளையும் ரயில்வே திணைக்களம் அதிகரிப்பு!

நாட்டின் அனைத்து ரயில் மார்க்கத்திற்குமான சேவைகள் கடந்த (திங்கட்கிழமை) முதல் அதிகரிக்கப் பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பிரதான மார்க்கத்தில் 64 ரயில் சேவைகளையும் கரையோர மார்க்கத்தில் 74 ரயில் சேவைகளையும் வடக்கு மார்க்கத்தில் 6 ரயில் சேவைகளையும் புத்தளம் ரயில் மார்க்கத்தில் 26 ரயில் சேவைகளையும் இந்த வாரம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.




அத்துடன் களனிவெளி மார்க்கத்தில் 12 ரயில் சேவைகளும் வடக்கு ரயில் மார்க்கத்தில் 6 ரயில் சேவைகளும் இடம்பெறவுள்ளன. இந்த ரயில் சேவைகள், நேர அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளமையுடன், நெடுந்தூர பயண சேவைகள் தொடர்ந்து இடம்பெறாது எனவும் அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் கசுன் சாமர ஜயசேகர தெரிவித்துள்ளார்.

# தினம் ஒரு விவசாய தகவல்

## Plantix செயலி

உங்களது ஆண்ட்ராய்டு கைப்பேசியை நடமாடும் பயிர் மருத்துவராக மாற்றிடுங்கள். ஒரு புகைப்படத்தைக் கொண்டு, பிளான்டிக்ஸ் பாதிக்கப்பட்ட பயிர்களில் உள்ள நோய்களைக் கண்டறிவதுடன் எல்லா விதமான பூச்சி, நோய் அல்லது ஊட்டச்சத்துக் குறைபாடு பிரச்சினைகளுக்குமான சிகிச்சையை வழங்குகிறது.

**உலகெங்கிலும் உள்ள விவசாயிகளுக்கான மிகப்பெரிய சமூக வலையமைப்பான பிளான்டிக்ஸ் சமூகத்தில் இணைந்திடுங்கள்.**

**சிறந்த விவசாய நடைமுறைகள், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் உரத்தைக் கணக்கிடும் கல்குலேட்டர். பிளான்டிக்ஸ் பயிர் ஆலோசனையிலிருந்து பலன்களைப் பெறுவதோடு உங்களது பயிர்கள் மற்றும் அதன் நிலைகளுக்கேற்றவாறு அமைக்கப்பட்ட வாராந்திர செயல்திட்டத்தைப் பெற்றிடுங்கள்.**

**பிளான்டிக்ஸ் பயன்பாட்டி அனைத்து முக்கிய பயிர்களுக்கும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது. பல மொழிகளில் கிடைக்கிறது மற்றும் பயன்படுத்த எளிதானது.**

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலில் சிக்கல் நிலை; அதனால் முடிவு இல்லை

## மாகாணசபைகள் குறித்து அரசு விளக்கம்

மாகாணசபைத்தேர்தலைநடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எவ்வித தீர்மானத்தையும் நாம் எடுக்கவில்லை. கொரோனா வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலேயே நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித் ததாவது:-

மாகாணசபைத்தேர்தல்தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

மாகாண சபைக்கு எதிரான போராட்டங்களை அரசுக்கு எதிரான போராட்டமாக மாற்றிவிட வேண்டாம் என ஒரு தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு அரசு ஒருபோதும் அஞ்சாது.

மாகாணசபைத்தேர்தலைநடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. ஆகவே, இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எவ்வித தீர்மானத்தையும் அரசு எடுக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

பொருளாதாரத்தை மேம்படுத்த அரசால் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அதிக நிதி அவசியமாகும். ஆகவே, நெருக்கடியான சூழ்நிலையில் தேவையற்ற செலவுகளைக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.



கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட முடியாது என்ற காரணத்தால் அதிக நிதி மருத்துவத்துறைக்கும், பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# வாவியில் காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

## முதலை கடித்தே மரணம்

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன குடும்பஸ்தர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுநள்ளிரவு 12 மணியளவில் குறித்த வாவிப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற புன்னைச்சோலை யைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆரோக்கியநாதன் மரியதாஸ் (வயது 48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் மீன்பிடிக்கச்சென்றபோது வாவியில் முதலையால் இழுத்துச் செல்லப்பட்டு சின்ன உப்போடையில் உள்ள களப்பு ஒன்றுக்குள் வைத்திருந்த நிலையில் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் சடலம் முதலை கடுமையாக சிதைத்துள்ள நிலையில் மீட்கப்பட் டுள்ளது.

அண்மைக்காலகமாக மட்டக்களப்பு வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் உள்ளன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டமையைத் தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக் களப்பு போதனாவைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

# தேர்தலை நடத்தினால் அரசுக்குப் படுதோல்வி

## புலனாய்வுப் பிரிவு அதிர்ச்சி அறிக்கையாம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, மாகாண சபைகளுக்கான தேர்தலைத் தற்போது நடத்தினால் அரசுக்குக் மிகப் பெரிய தோல்வி ஏற்படும் என்கின்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

புலனாய்வுப் பிரிவுகளால் அரச உயர்பீடத்துக்கு வழங்கப்பட்ட இரண்டு அறிக்கைகளில் இந்தத் தகவல் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கண்டி, செங்கடகல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இதனைக் கூறினார்.

இந்த அச்சத்தின் காரணமாகவே கோட்டாபாய அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்திவைத்து வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரச புலனாய்வுத்துறை இரண்டு பகுதிகளாகப் புலனாய்வு செய்திருக்கின்ற நிலையில் அதில் கோட்டாபய அரசின் படுதோல்வி நிச்சயமாக உறுதிசெய்யப்பட்டது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தொற்றுக்குள்ளான மூவருடன் கொழும்பில் தங்கியிருந்த எண்மர் இப்போது வடக்கிலாம்

வடக்கு மாகாணத்தின் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்று தங்கியிருந்த 11 பேரில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்களை மேற் கோள்காட்டி இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வாரம் கொழும்பில் குறித்த 11 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

கொழும்பில் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகக் குறைந்தது 3 நாள்கள் ஆகும் என்பது நடைமுறையாகும்.

இந்நிலையில் பி.சி.ஆர். முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக 11 இளைஞர்களும் தமது ஊர்களுக்குத் திரும்பியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

நேற்றைய தினம் அவர்களுக்கான சோதனை முடிவுகள் வெளியாகியிருந்த நிலையில் அவர்களில் 3 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது அடை யாளம் காணப்பட்ட நிலையில் கொழும்பு சுகாதாரத் திணைக்களத்தினால் இளை ஞர்கள் வதியும் மாவட்டங்களின் சுகாதாரத் திணைக்களங்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதனை அடுத்து குறித்த மூவரும் சுகாதார உத்தியோகத்தர்களால் அடையாளம் காணப்பட்டு இன்று முற்பகல் கொரோனாத் தடுப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஏனைய எட்டு இளைஞர்களும் உடனடியாக தனிமைப்படுத்தப்பட வேண்டி உள்ளமையால் அவர்களைத் தேடும் நடவடிக்கையினை சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

# நுவரெலியா மாவட்டத்தில் 18 பேருக்குக் கொரோனா!

நுவரெலியா. ஜன. 06.

நுவரெலியாவில் மேலும் 18 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ சுகாதார பிரிவிற்கு உட்பட்ட டிக்கோயா இன் ஜஸ்ட்ரி தோட்டம் பீரட் பிரிவில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தத் தோட்டத்தில் உள்ள 12 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தனிமைப் படுத்தப் பட்டுள்ளனர்.

பீரட் தோட்டத்தில் ஏற்கனவே நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவியமையை அடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப் பட்டு, பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் திங்கட்கிழமை வெளியாகின.

இதில் தாயொருவருக்கும் மகளுக்கும் வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. தொற்றாளர்கள் இருவரும் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பீரட் தோட்டத்தில் அம்மன் ஆலயத்தின் பூசகர் ஒருவர் உட்பட 12 குடும்பத்தைச் சேர்ந்த 45 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். இதனையடுத்து அந்தத் தோட்டம் தற்காலிகமாக தனிமைப் படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, பொகவந்தலாவ நோர்வூட் பகுதியிலும் 28 வயதுடைய பெண்ணொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் திங்கள் வரையான காலப்பகுதியில் 436 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க: பிணையாளர்களாகத் தமிழ் எம்.பிக்கள் தயார்!

## நாடாளுமன்றில் அரசிடம் சார்ள்ஸ் எம்.பி. எடுத்துரைப்பு

கொரோனா என்ற கொடிய வைரஸ் நோய்த் தொற்றில் இருந்து தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமித்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணையாளர்களாகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தயாராக உள்ளோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களில் சிவில் அமைப் புகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் இன்று காலை 10 மணிக்கு கவனயீர்ப்புப் போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் இடம்பெற்றது உரிமைப் போர். அதில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் இன்று கொரோனாவின் பிடிக்குள் சிக்கி யுள்ளனர். எனவே, அவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமித்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணை வைப்பதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தயாராக உள்ளோம் என்பதையும் ஜனாதிபதியிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதனை சபை யில் மக்கள் சார்பில் முன்வைக்க விரும்பு கின்றேன்.



இந்த நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டு அதனால் இத்தனை தாக் கங்கள் ஏற்பட முழுமையான காரணம் ஜனாதிபதியே. அவரே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். ஒரு சிறிய தீவுக்குள் - குறுகிய மக்கள் தொகை வாழும் இந்த நாட்டுக்குள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாதமைக்குப் பிரதான காரணம் பொறுப்புக்களை சுகாதாரத்துறையிடம் இருந்து பிடுங்கி இராணுவத்துக்கு வழங்கியமையே யாகும். இதுதான் நாடு மிகப்பெரிய தோல்வியைச் சந்திக்கக் காரணமாக அமைந்துள்ளது.

அரச தரப்பினர் இராணுவத்தை வைத்து நாட்டு மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றனர். தேர்தல் வெற்றியை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு அரசு தீர்மானம் எடுக்கின்றது. அப்போது இருந்த நிலையில் இன்று இந்த நாட்டு மக்களின் மனநிலை இல்லை என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். என்றார்.

# தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைபற்றி மத்திய வங்கி அறிவிப்பு

2020 ஆம் ஆண்டுக்கான நாட்டின் பொருளாதார செயற்பாடுகளை நோக்குமிடத்து 3.9 சதவீத வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும், மீண்டும் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்காகத் தற்போது காணப் படுகின்ற தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலை யையே 2021 ஆம் ஆண்டிலும் தொடரவுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருக்கிறது.

2020 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார மதிப்பீடு மற்றும் 2021 இல் பொருளாதார மீட்சிக்கான வழிகாட்டல் கள் அடங்கிய அறிக்கையொன்றை கடந்த திங்கட் கிழமை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் சமர்ப்பித்திருக்கிறார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

கொவிட் – 19 உலகளாவிய நோய்த்தொற்று சமூகங் கள், பொருளாதாரங்கள் மற்றும் நிறுவனங்களின் தொழிற்பாட்டு முறைகளைக் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு முற்றுமுழுதாக மாற்றியமைத்தி ருக்கிறது. இது இரண்டாம் உலகப்போரின் பின்னர் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மிகப்பாரிய நெருக்கடி யாகும். ஏனைய உலகநாடுகளின் பொருளாதாரத்தைப் போன்றே, கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணத்தடைகளின் காரணமாக எமது நாட்டின் பொரு ளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அதன் விளை வாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்க ளுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கமும் மத்திய வங்கியும் இணைந்து மேற்கொண்டன.

நாணய நிலைமைகளைத் தளர்த்துவதற்கான மத்திய வங்கி முன்னொருபோதுமில்லாத புதிய வழி முறைகளை அறிமுகப்படுத்தியதுடன் கடன் வழங்கல் தொடர்பான நிதியங்களின் செலவையும் குறைத்தது. அதேபோன்று அரசாங்கமும் இறைத்தூண்டலுக்கான பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. எனினும் சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதாரப்பாது காப்பு நடைமுறைகளின் விளைவாகத் தளர்வடைந்த பொருளாதார செயற்பாடுகள் அரச இறையில் குறிப்பி டத்தக்க சரிவொன்று ஏற்படுவதற்குக் காரணமாகியது என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த அறிக்கையில் 2021 மற்றும் அதற்கு அப்பால் நாணயக்கொள்கை உபாயம் மற்றும் கொள்கைகள், 2021 மற்றும் அதற்கு அப்பால் நிதி யியல்துறையின் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாட் டுடன் தொடர்புடைய மத்திய வங்கியின் கொள்கைகள், துணை மற்றும் முகவர் தொழிற்பாடுகளுடன் தொடர்பு டைய கொள்கைகள் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் 2021 ஆம் ஆண்டுக்கான வழிகாட்டல்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. அந்த வழிகாட்டல்களில் கூறப்பட்டிருப் பவை வருமாறு –

நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் 2020 ஆம் ஆண்டின் முதற்காலாண்டில் சிறிதளவி லான சரிவு, இரண்டாம் காலாண்டில் ஒப்பீட்டளவில் பாரியளவிலான வீழ்ச்சி மற்றும் மூன்றாம் காலாண்டில் சிறிதளவில் சாதகமான வளர்ச்சி என்பன அவதானிக்கப் பட்டன. எனினும் நான்காம் காலாண்டையும் கருத்திற் கொண்டு நோக்குகையில், பொருளாதாரத்தில் ஒட்டு மொத்த ஆண்டுக்கும் 3.9 சதவீத வீழ்ச்சி எதிர் பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் பொருளாதார நட வடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியை உறுதிப் படுத்தும் நோக்கில், தற்போது காணப்படுகின்ற தளர்த் தப்பட்ட நாணயக்கொள்கை நிலையையே மத்திய வங்கி 2021 ஆம் ஆண்டிலும் தொடரவுள்ளது.

மேலும் கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்துக்குக் கீழேயே தொழிற்பட்டு வருகின்றது. இந்த நிலைமை கொவிட் – 19 திடீர் பரவலால் மேலும் விரிவடைந்தி ருக்கிறது. இந்நிலையில் பொருளாதாரத்துக்குத் தூண்டுதலளிக்கும் வகையில் 2020 இல் அறிமுகப்படுத் தப்பட்ட கொள்கைகள் உண்மைப் பொருளாதாரத்தின் காத்திரமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி பொருளாதார மீட்சிக்காக மேற்கொள்ளப் படக்கூடிய மேலும் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தொற்று எண்ணிக்கை கிழக்கில் உயர்கின்றது

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கிழக்கு மகாணத்தில் இதுவரையான காலப் பகுதியில் கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்தஎண்ணிக்கைஆயிரத்து 323 ஆகஉயர்ந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 264 பேரும், திருகோண மலை மாவட்டத்தில் 173 பேரும், அம்பாறை பிராந்தி யத்தில் 34 பேரும், கல்முனை பிராந்தியத்தில் 852 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 539 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், 802 பேர் குணமடைந்து வீடுதிரும் பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதுவரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் 7 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ள தாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்

## ஒரே குடும்பத்தில் ஐவருக்குத் தொற்று

மன்னாரில், கடந்த முப்பதாம் திகதி புத்தளத்தில் இருந்து மன்னார் வருகை தந்து எருக்கலம்பிட்டி பகுதி யில் தனிமைப்படுத் தப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கே நேற்றைய தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது

கொழும்பில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்ததாக பொலிஸ்மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகதகர்களினால் தனிமைப்படுத்தப் பட்டிருந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

# ஓட்டமாவடி பிரதேசத்தில் பள்ளிவாசல்களுக்குப் பூட்டு

ஓட்டமாவடி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பிரதேசத்தி லுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களையும் நேற்று முதல் தற்காலிகமாக மூடி வைக்குமாறு சுகாதார வைத் திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோ தனைகளின்போது கொரோனா தொற்றாளர்கள் இனங் காணப்பட்டமையைத் தொடர்ந்து இத்தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க வேண்டி முஸ்லிம் விவகார பண்பாட்டலுவல் கள் திணைக்களத்தின் எமது பிராந்திய உத்தியோகத்தர் களின் தீர்மானத்துக்கு அமைய பள்ளிவாசல்களை மறு அறிவித்தல் வரை மூடி வைக்குமாறு பள்ளிவாசல் கள் நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தல் இல்லாமல் சுற்றுலாப் பயணிகள்; பாரிய கொத்தணி உருவாகும் சூழல் என எச்சரிக்கை

## அபாய மணி ஒலிக்கிறார் வைத்தியர் சுதத் சமரவீர

வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பிரயா ணிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவதில்லை. எனவே அவர்கள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமா னதாகும்.

அவ்வாறில்லை என்றால் வெளிநாட்டவர்களால் உள்நாட்டவர்கள் தொற்றுக்கு உள்ளானால் பாரிய கொத்தணிகள் உருவாகக் கூடும் என்று சுகாதார அமைச் சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தி யர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பிரயாணி கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு அதன் நிறை வில் சுற்றுலா செல்லும் முறைமை பின்பற்றப்படவில்லை.

அவ்வாறு செய்வது சாத்தியமற்றது. காரணம் தனிமைப்படுத்தல் காலத்தில்தான் அவர்கள் சுற்றுலா செல்கின்றனர். எனவே சுகாதார பாதுகாப்பு விதி முறைகளைப் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமா னதாகும்.

காரணம் சுற்றுலாத்துறையினர் மூலம் உள்நாட்டி லுள்ளோர் ஏதேனுமொரு வகையில் தொற்றுக்கு உள்ளானால் அதனால் பாரிய கொத்தணிகள் உருவாகக் கூடிய வாய்ப்புள்ளது. அத்தோடு இந்த வைரஸின் வெவ்வேறு வகைகள் நாட்டில் உருவாகக் கூடிய வாய்ப்பும் இதன் மூலம் ஏற்படும்.

எனவே சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய ஹோட்டல் ஊழியர்கள், வாகன சாரதிகள் உள்ளிட்டோர் இந்தக் காலப்பகுதிகளில் அவரவர் தொழில் புரியும் இடங்களில் மாத்திரமே இருக்க வேண்டும்.

முதலாம் கட்ட சுற்றுலா பயணிகள் நாட்டிலிருந்து சென்றதன் பின்னர் குறித்த சேவையாளர்கள் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட வேண்டும். அதன் பின்னரே அவர்கள் சமூகத்துடன் இணைய முடியும்.

நாட்டில் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக் கையில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டாலும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் இனங்காணப் படுகின்றனர்.

கொழும்பு மாநகரசபையை அண்மித்த பகுதிகள் மற்றும் மேல் மாகாணத்தில் ஆரம்பத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட போதிலும் தற்போது ஏனைய மாவட்டங்களிலும் தொற்றாளர்கள் இனங் காணப்படுகிறார்கள்.

இதன் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில மக்கள் கூட்டத்துக்கு எழுமாறாக அன்டிஜன் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை என்பன முன்னெடுக்கப் படுகின்றன.

அத்தோடு வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைகளுக்கு வருபவர்களுக்கு ஏதேனும் தொற்று அறிகுறிகள் காணப்பட்டால் அவர்களுக்கும் பரிசோதனை முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தொற்றாளர்கள் குறைவாக இனங்காணப்படும் பகுதிகளில் தொற்றுக்குள்ளான அனைவரையும் இனங்கண்டு அந்த பகுதியை முழுமை யாக கொரோனா அற்ற பகுதியாக மாற்ற முடியும். – என்றார்.




# 5 அரச நிறுவனங்களின் கணக்காய்வுகள் கோப் குழுவில் பரிசீலிக்கப்பட உள்ளன

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழு அரச நிறுவங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை பரிசீலனை செய்யவுள்ளன.

அதன் பிரகாரம் சுயாதீன தொலைக்காட்சி சேவை, மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகிய நிறுவனங்கள் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளன என அதன் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில் –

கொவிட் 19 சுகாதார ஒழுங்குவிதிகளுக்கு அமைய பாதுகாப்பு முறைகளை பின்பற்றி ஜனவரி மாதம் 06, 08, 19, 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் கோப் குழு கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று கோப் குழு முன்னிலை யில் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனவரி 08 ஆம் திகதி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் முதலீட்டு முகாமைத்துவம் தொடர்பான விசேட கணக் காய்வு அறிக்கையும், ஜனவரி 19 ஆம் திகதி இலங்கையில் பெற்றோலியத்தை சேமித்து வைத்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய கணக்காய்வு அறிக்கையும் பரிசீலனை செய்ய தீர்மானித்திருக்கின்றோம்.

அத்துடன் ஜனவரி 21 ஆம் திகதி தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பிலும், ஜனவரி 22 ஆம் திகதி வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையின் தற்போதைய நிலைமை பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கையும் கோப் குழு கூட்டத்தின் போது கலந்துரை யாடப்படவுள்ளது. – என்றார்.

# புதிய பிரதேச செயலர் பிரிவு மன்னாரில் உதயமாகின்றது!

## ஆறாவது பிரிவாக மாந்தை வடக்கு

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் புதிதாக - ஆறாவது - பிரதேச செயலாளர் பிரிவாக மாந்தை வடக்கை மாற்றி அமைப்பதற்கான பூர்வாக ஏற்பாட்டுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் தற்போதைய மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் 85கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 17 கிராம சேவகர் பிரிவுகளைத் தனியாக பிரித்து ஒரு புதிய பிரதேச செயலாளர் பிரிவினை ஏற்படுத்துவதன் மூலம் பின் தங்கிய கிராமங்களையும் முன்னேற்ற முடியும் எனக் கருதப்படுகின்றது.

இதேநேரம் தற்போது மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலகத்தில் இருந்து மிகத் தொலைவில் உள்ள கிராம மக்கள் தமது தேவையை பூர்த்தி செய்ய நீண்ட தூர அலைச்சலிற்கும் நிதிச் செலவிற்கும் உட்படுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

அதன் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற எல்லை மீள் நிர்ணயக் குழுவின் பரிந்துரை மற்றும் அமைச்சரவை ஒப்புதலின் அடிப்படையில் குறித்த மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன் அடிப்படையில் அப்பகுதி பொது அமைப்புகளினதும், மக்கள் பிரதிநிதிகளினது அபிப்பிராயத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியின் பின்னர் வர்த்தமானி அறிவித்தலிற்கான ஏற்பாடுகளை செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

# கல்லூரி அதிபர்கள் மூவருக்கு கிளிநொச்சியில் இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 3 அதிபர்கள் டிசம்பர் 31ஆம் திகதிய கடிதம் மூலம் மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் தற்போதைய கிளிநொச்சி இந்து கல்லூரி அதிபர் கிருஷ்ணபிள்ளை விக்னராஜா திருவையாறு மகா வித்தியாலயத்திற்கும், பாரதி வித்தியாலய அதிபர் திருமதி மீனலோஜினி இதய சிவதாஸ் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். திருவையாறு மகா வித்யாலயத்தில் தற்போது உள்ள அதிபர் பத்மநாதன் ஸ்ரீதரன் பாரதி வித்தியாலயத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிபர்களின் சம்மதத்துடன் இந்த இடமாற்றம் மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் உதயகுமாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஆயிரம் கோடி ரூபா நிதி மோசடி!

## அதிர்ச்சி தகவலை வெளியிட்டது ஜே.வி.பி.

சீனிக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த வரித்தொகை மாற்றம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் துரிதமான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்குமாறும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் செயற்குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றப்புலனாய்வு பிரிவில் கடந்த திங்கட்கிழமை சட்டதரணி சுனில் வட்டகலவுடன் வந்திருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமது முறைப்பாடு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சீனிக்காக நிர்ணயிக்கப்பட்ட வரி தொகையை மாற்றம் செய்வது தொடர்பில் நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் காரணமாக அரசாங்கத் துக்குக் கிடைக்க வேண்டிய பெருந்தொகையான வரிப் பணம் கிடைக்கப் பெறாமல் போயுள்ளது.

இந்நிலையில் இந்த வர்த்தமானி அறிவித்தல்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ள இறக்குமதியாளர்கள் இலாபமீட்டிக் கொண்டுள்ளமை தொடர்பில், முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டு முறைப்பாடு அளிக்கவே நாம் இங்கு வந்துள்ளோம்.

இந்நிலையில், அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் சிலர், அரச நிறுவனவங்களின் உயர் அதிகாரிகளுடன் இணைந்து 1000 கோடி ரூபாவுக்கும் அதிகமான அரச பணத்தை மோசடி செய்துள்ளனர்.

இந்த திட்டமிட்ட பண மோசடிக்கு இடமளிக்கும் வகையில் நிதி அமைச்சு மற்றும் நுகர்வோர் அதிகார சபை என்பன இணைந்தே தீர்மானங்களை எடுத்துள்ளன. இதன்போது , ஒரு கிலோ கிராம் சீனிக்காக அறவிடப்பட்ட 50 ரூபா வரிப்பணத்தை , 25 சதமாக குறைப்பது தொடர்பில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பின்னரே இந்தக் கொடுக்கல் - வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.


இந்த விடயம் தெரியவந்ததை அடுத்து சதொச நிறுவனத்தின் தலைவர் இந்த கதிரையிலிருந்து நீக்கப்பட்டு, தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்துக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கதிரைகளை மாற்றுவதன் ஊடாகத் தமது குற்றங்களை அரசாங்கம் மறைக்க முயற்சித்தால் அதற்கு இடமளிக்க முடியாது.

திருடர்களைப் பிடிப்பதற்காக ஆட்சிக்கு வந்த அரசாங்கம், மக்களுக்கு சொந்தமான 1000 கோடி ரூபா பணத்தை கொள்ளையிட்டுள்ளது. மக்களுக்கு 85 ரூபாவுக்கு சீனியை விற்பனை செய்யுமாறு விடுக்கப்பட்ட உத்தரவுக்கமையவே, இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் , கொவிட் - 19 தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டுவருவதற்காக 1000 கோடி ரூபா பணத்தை கடனாக பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. அது தொடர்பில் ஜனாதிபதி வெட்கப்பட வேண்டும். அதனால் இந்த மோசடி தொடர்பில் விசாரணை செய்து , குற்றவாளிகளுக்குஎதிராக சட்டநடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேவேளை , இலஞ்சம் மறறும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவிலும் நாம் இதுத் தொடர்பில் முறைப்பாடு அளிக்கவுள்ளோம். ஆரம்பத்தில் , மத்தியவங்கி பிணைமுறிகள் ஊடாக மோசடிகளைச் செய்தனர். தற்போது வரி அறவீடுகள் ஊடாக மோசடி செய்து வருகின்றனர். இந்நிலையில் , தமது வர்த்தக நண்பர்களை போசித்துவரும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணையுமாறு நாம் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.
- என்றார்.

4SIGHT OPTICALS
08B 1-ம் மாடி
கார்கில்ஸ் சதுக்கம்
யாழ்ப்பாணம்.






அனைத்து விதமான
மூக்குக் கண்ணாடிகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
021 222 3038 / 077 700 2411

CNR world wide Express
International Courier & Cargo Service.
Courier & Cargo
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.
அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.



இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1983.05.22
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்தரம் 4
சூ/செவ் - 1இல்
பாவம் - 34 1/2
கல்வி - A/L
தொழில் - சொந்த இரும்புகடை
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 2000.03.03
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 29
செவ் - -------
கல்வி - A/L
தொழில் - ----------
எதிர்பார்ப்பு - வெளிநாடு

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2021 இல் வெளியிடப்பெற்றது.